உ

சிவமயம்

4439

# சௌரசாந்திரமாசமும் விரதங்களும்.

யாழ்ப்பாணம், மாவிட்டபுரம்

தேவஸ்தானம்

வேதசிவாகம சித்தாந்த சங்கவெளியீடு.



கலியப்தம் 5038

தாதுஆ புரட்டாதி.

[illegible] அச்சியந்திரசாலை

[illegible]

உ

கணபதி துணை

# சௌரசாந்திர மாசமும் விரதங்களும்

சைவாபிமானிகளே!

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தா ரால் "நிசமும் தாதுவருட பிள்ளையார் சதுர்த்தி, சரஸ்வதிபூசை கந்தர்சட்டி, மாசிவராத்திரி இவைகளை எப்போது கொண்டாடவேண்டும்?" என்னும் முகாமத்துடன் வெளியிடப்பட்ட துண்டுப்புத்தகம் கண்டனம். அதிலே "சௌரமானக் கணக்குப்படி இவ்வாண்டில் பிள்ளையார் சதுர்த்தி ஆவணிமீ 5-ந் உயிலும், சரஸ்வதிபூசை புரட்டாதிமீ 9-ந் உயிலும் கந்தர்சட்டி ஐப்பசிமீ 5-ந் உயிலும் வருகின்றன. இங்ஙனமே நமது சைவப் பஞ்சாங்கம் கூறுகின்றது" என்று எழுதியிருக்கிறார்கள். மற்றைய பஞ்சாங்ககாரர்கள் சதுர்த்தி புரட்டாதிமீ ௬-ந் உயும், நவராத்திரி பூசாரம்பம் புரட்டாதிமீ நக-ந் உயும், சட்டி கார்த்திகைமீ ௫-ந் உயும் கொள்ளுதல் வேண்டும் என்று நிர்ணயி றனர். மற்றைய பஞ்சாங்ககாரர்கள் நிர்ணயித்தவே மங்களுக்குச் சம்மதமாகவிருக்கின்றது.

தெ. சை. சங்கத்தார் "சாந்திரமானத்தைக் காட்டிலும் எத்தனையோ கோடிமடங்கு மேலானது சௌரமானம்" என்னும் தமது கொள்கையைச் சாதிக்குமாறு சந்திரனையும், சாந்திரமானத்தையும் உளம் போனவாறு தூஷித்து எழுதியிருக்கின்றார்கள்.

சந்திரன் சிவபெருமானுக்குச் சிரோபூஷணமாயும், அவருடைய மூன்று திருக்கண்களுள் ஒன்றாயும், அட்டமூர்த்திகளுள் ஒரு மூர்த்தியாயும், சிவவிரதங்களுட் சிறந்த சோமவாரா திபனாயும், விளங்குகின்றான். கௌரியைப் பிரத்தியதிதேவதையாகப் பெற்றவன். நிசாபதியாயுள்ளவன். இவை முதலிய மகத்துவம் வாய்ந்த சந்திரனையும், அவனாற் பற்றும் மாதத்தை

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER I 1D

தும் இகழ்ந்து எழுதுவது சபைக்கு அடாது! அடாது!! சந்திரனை விலக்கிவிடுவோமாயின், அவனுடைய கதியாலாய திதியில்லாமற் போவதோடு திதியைப் பிரதானமாகவுள்ள விரதங்களும் இல்லையாய் முடியும்.

இன்னும் அவர்கள் "தமிழ் மக்களுக்குரியது சௌரமானம்; ஆரியப் பிராமணருக்குரியது சாந்திரமானம். ஆகமங்களெல்லாம் சௌரமாதத்திலேயே எல்லாவிதமான விழாக்களும் சிறப்புகளும் செய்யப்பெறவேண்டுமென விதிக்கின்றன" எனவும், "சுமார்த்தர்கள் பண்டைக்காலத்தில் மகமதியரைப் போலவே பிறையை வைத்து மாதத்தைக் கணக்கிட்டு வந்தார்கள். இவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தவுடன் வளர்பிறை முதல்நாள் முதலாக அமாவாசை முடிய ஒரு மாதமெனக் கணக்கிடத் தொடங்கினர். தம் சாந்திரமாதங்களுக்குச் சௌரமானிகளாகிய தமிழ்மக்களின் தமிழ்மாதப் பெயர்களையே வைத்து வழங்குவாராயினர். இவர்கள் சித்திரை என்பதை 'சைத்திரம்' என்றும், வைகாசி என்பதை 'வைசாகம்' என்றும், ஆனி என்பதை 'சேட்ட'மென்றும் இங்ஙனமாகப் பிற மாதங்களையுந் திரித்து வழங்குவாராயினர்" எனவும் எழுதியிருக்கின்றார்கள்.

உத்தரகாரணம் சிவராத்திரிவிதி படலத்தில்:- "ப்ரதமாதினமாரப்ய அமாவாஸ்யாந்திகம க்ரமாத த்ரிம்சத்தினம் ப்ரகுர்வீத சாந்திரமான மிஹோச்யதே" பிரதமை முதல் அமாவாசை அந்தமாயுள்ள முப்பது தினங்கள் சாந்திரமானமென்று சொல்லப்படும், என்று கூறப்பட்டிருக்கிறது.

சகலாகமங்களையும் ஆராய்ச்சி செய்யும்பொருட்டுப் பரமசிவத்தை நோக்கித் தவஞ்செய்து முக்கண்பெற்ற திரிலோசன சிவாசாரியர் செய்த சித்தாந்த ஸாராவளி 'அர்க்கேயுக்மகே' என்னும் சுலோகத்துக்கு அநந்தசிவாசாரியர் தாம் செய்த வியாக்கியானத்தில்,

"சாந்திரமாஸஸ்து தத்தந்மாஸ சுக்லபக்ஷ பௌர்ணமாசீ யுக்த தத்தந்நக்ஷத்ரப் பிரதான பூத பௌர்ணமாசி மத்யே பரிவர்த்தமாநோ மவாஸ்யாந்தச்ச"

சாந்திரமாசமானது சௌரமாசத்திலே சுக்கிலபக்ஷப் பூரணையோடுகூடிய அவ்வந்நக்ஷத்திரத்தையே பிரதானமாகவுடை

வ பூரணையை நடுவில் உடையதும் அமாவாசையை அந்தத்தி லுடையதுமானது" என்று சொல்லியருளினர்.

பூரணை வரும் நக்ஷத்திரத்தின் பெயரே அவ்வம்மாசப் பெயராக வழங்குகின்றது. ஐப்பசி மாசத்திலே அசுவினி நக்ஷத்திரத்தில் பூரணை வருவதால் அந்தமாசம் ஆசுவயுக் எனப் பெயர்பெறும். விசாகநக்ஷத்திரத்தில் பூரணை வருதலால் வைகாசியீ வைகாசம் எனப் பெயர்பெறும். பூரட்டாதி உத்தரட்டாதிகளில் பூரணை வருதலால் புரட்டாதியீ பாத்திரபதம் எனப்படும். இப்படியே மற்றைய மாதங்களுக்கும் வந்தபெயர்கள் சாந்திரமானப் பெயர்களேயாம். இதுவே சோமசம்பு சிவாசாரியர் முதலிய ஆன்றோர்களுக்கும் கருத்தாதலைச் சோமசம்பு பத்ததி வியாக்கியானம் முதலிய நூல்களால் அறிந்துகொள்ளலாம்.

"சைத்திரார்க்ஷம் மேஷமாஸேது சைத்திரமாஸம் பிரகீர்த்திதம்"

மேஷமீ தத்தில சித்திரை நக்ஷத்திரம வருதலால் அது சைத்திரம் எனப்படும.

"பர்வயுக்த இருக்ஷஞ்ச தத்தன மாசாக்ய மேவவா"

பூரணையோடுகூடிய நக்ஷத்திரப்பெயரே அவ்வம்மாசப் பெயராகின்றது. என உத்தரகாரணாகமம சிவராத்திரி விதிபடலத்தில் வருதலானும இவ்வுண்மை உணரப்படும.

ஆகமங்களிலே சௌரம் சாந்திரம் நக்ஷத்திரம் சாவனம் என மாசங்களை நான்காக வகுத்து அவற்றில உற்சவங்களைச் செய்யும் முறையும் விதிக்கப்பட்டிருக்கின்றன. உத்தரகாரணத்தில்,

"சௌரமானம் யதாசம்போ சாந்த்ரமிர்த்தி இனம்ததா"

சிவபெருமானுக்குச் சௌரமானம் எங்ஙனமோ அங்ஙனமே சாந்திரமானமும் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் சைவ சமயிகளுக்குச் சௌரம் சாந்திரம் எனும் இரண்டு மாசங்களும் வேண்டற்பாலனவேயாம்.

இங்ஙனமாகச் சைவாகமங்களிலும பூர்வாசாரியர்கள்செய்த பத்ததிகளிலும் இருத்தலினாலே சை. சி. சங்கத்தார் சொல்லுகிறபடி சாந்திரமாதம் சுமார்த்தப் பிராமணர்களுக்கு மா

த்திரம் உரியதல்ல என்பதூஉம், அவர்கள் சார்ந்த சங்கத்தைத் தொடங்கிய 'பேர்கொண்ட' மாசங்கள் அல்ல என்பதும் சித்திரை முதலிய தமிழ்மாதப் பெயர்களைத் திரித்து வழங்குகின்றனர் என்பதும் வெளியாகின்றன.

சை. சி. சங்கத்தார் "சாந்திரமானிகளாகிய ஸ்மார்த்தப் பிராமணர்கள் அதிமாசம் என்பது பொய்மாசம் ஆதலின் அதனைத் தள்ளிவிடவேண்டும் என்று கூறுவார்கள்" என்று எழுதியுள்ளார்கள்.

காமிகாகமம் காலவிதி படலத்தில்,

"அதிமாசம் த்யஜேத் தீமான் கேசித் தத்விசேஷத:'

புத்திமானாகிய ஆசாரியர் விசேஷமாக அதிமாசத்தை விடவேண்டும் எனவும், சித்தாந்தசாராவளி வியாக்கியானத்தில்,

"மேஷயுக்தசைத்ராதிநாமமாஸேஷு பக்ஷயோர்யதா க்ரமே தஸ்மின் மாஸே யதா யஸ்மின் ஸமயே சாசத்வயே மேஷாதி சங்க்ராந்தெள அமாவாஸ்யாத்வயே ஸதி அதிகோ அதிமாஸ ஸ்யாத்' பூர்வமாஸஸ்ய மலமாஸதயா த்யாஜ்ய இதிபாவ

தர்சத்வயமத்ரைக ஸங்க்ரம யதா ஸங்க்ரம கோபி
மலமாஸஸ் ஸவிக்ஞேயஸ் ஸர்வகர்ம பஹிஷ்க்ருத."

மேடசூரியனோடுகூடிய சைத்திராதி மாசங்களில் இரண்டமாவாசை வருமாயின், அதிகமாசமாகும் முந்தியது மலமாசம் என்பது கருத்து. மலமாசம் எல்லாக்கருமங்களினும் நீக்கத்தக்கது" எனவும், சொல்லப்படுகின்றன. அதினால் சிரம சிவாக்கிரயோகீந்திர சிவாசாரிய சுவாமிகள் 'அதிமாசம் வந்தால் அதைவிடுத்து நிஜமாதத்திலே செய்க' என்று கிரியாதீபிகையிற் சொல்லியிருக்கின்றமையால் அதிப்பிரமாணியமாகிய சிவபெருமானுடைய திருவாக்கின்படியே மலமாசத்தை ஆப்தர்கள் நீக்கிவருகின்றனரேயன்றி 'ஏமாற்றப்பட்டார்கள்' அல்லர்.

இவ்வாற்றான், மூலாகமங்கட்கும் பூர்வாசாரியர்கள் செய்த பத்ததிகளுக்கும் மலமாசத்தை நீக்கிவிடுதல் சம்மதமேயாம் என்பது நிலைநிறுத்தப்பட்டமை காண்க.

சங்கத்தார் நவராத்திரியைச் சௌரமானப்படி நிர்ணயிப்பதாக எடுத்துக்கொண்ட ஆகமப் பிரமாணங்கள்,

(சாமிசாகமம்)

கந்யாசிதப்பிரதமே மாஸஸ்ய நவம்யந்த முமாவிரதம்: புரட்டாதிமீ பூருவபக்கப் பிரதமை முதல் நவமி முடிவாய நவராத்திரி உமாதேவியின் விரதம். (இது இடைச் சொருகல்)

(பூர்வகாரணம்)

"அதாதஸ்ஸம் பிரவக்ஷ்யாமி நவராத்ரி விதிக்கிரமம் ஆசுவயுக் சுக்லபக்ஷேது பிரதிபந்நவம்யந்தகே பிரதிபத் தினமாரப்ய விரதோத்சவமதாசரேத்"

இனி நவராத்திரி விதிக்கிரமத்தைச் சொல்லுகிறேன். ஐப்பசிமீ சுக்கில பக்ஷத்துப் பிரதமை முதல் நவமி முடிவாயுள்ள ஒன்பது நாளிலும், பிரதமை தொடங்கி விரதத்தையும் உத்ஸவத்தையும் செய்க, என்பனவேயாம், இப் பிரமாணங்களினால் நவராத்திரி புரட்டாதி மாதத்திலே ஆசுவிஜ சுத்தமாகிய பிரதமையில் ஆரம்பிக்கவேண்டும் என்று ஆகின்றது. தாம் பிரமாணமாகக்கொண்ட இச்சுலோகங்களுக்கு வலிந்து பொருள்கொள்ளத் துணிந்து எழுதியதாவது:—

"இதில் அஸ்வயுக் என்பது சாந்திரமான ஐப்பசியாம். சாந்திரமான ஐப்பசி பெரும்பாலும் புரட்டாதியிலேயே பிரதமைமுதல் நவமிமுடிய வருமாதலால் இந்தவாக்கியம் தோன்றியது. ஆதலால் இசனைச் சாந்திரமான ஐப்பசி என்றாவது சௌரமான ஐப்பசி யென்றாவது மயங்கி விடுதல் கூடாது. சாந்திரப்பெயராக இங்கே கூறப்பட்ட ஆஸ்வயுக் சௌரப் புரட்டாதியையே யுணர்த்தும்" என்பது.

அமரசிங்கர் தமது நிகண்டில் புரட்டாதிக்கு "நபஸ்ய, ப்ரௌஷ்டபத, பாத்ரபத" என்பனவே பெயராகும் என்றும், ஐப்பசிக்கு "ஆசுவின, இஷ, அச்வயுக்" என்பனவையே பெயராகுமென்றும், குறித்திருக்கின்றார். இதனால், அசுவயுக் என்ற பதம் ஐப்பசியை யுணர்த்துமேயன்றி ஒருபோதும் புரட்டாதியை யுணர்த்தாது. இது சமஸ்கிருத நிகண்டு படிக்கும் சிறுவர்களுக்கும் நன்றாக விளங்கும்.

"ஆகமங்களெல்லாம் சாந்திரமானமாகக் கூறப்பெறும் மாதப் பெயர்களையெல்லாம் சௌரமான மாதப்பெயர்களாகவே கொள்ளவேண்டும்" என்கிறார்கள்.

சாந்திரமாதப் பெயர்கள் சௌரமாதப் பெயர்களாக மாட்டா. சௌரமாதப் பெயர்கள் மேடம், இடபம் முதலியன. ஸ்மார்த்தர்களாலே திரிந்து வழங்கிய பெயர்கள் எனக் கூறினார்கள் பின்பு அப்பெயர்களைச் சௌரமாசப் பெயர்களாகக் கொள்ளவேண்டும் என்கிறார்கள். இவர்கள் மதிஎன்னே!

சை. சி. சங்கத்தார் உத்தரகாமிகாகமத்திலே, துர்க்கா பூஜாவிதிபடலத்தில்வரும்.

> "கந்யாகதே ஸவிதரி சுக்லபக்ஷேஷ்டமீயுதா
> மூலநட்சத்ர சம்யுக்தா ஸாமஹா நவமீஸ்ம்ருதா"

என்னும் வசனத்தைக்கொண்டு "மகா நவமியென்பது கன்னியாரவியாகிய புரட்டாசியில இருக்கவேண்டும் என்பது இன்றியமையாத விதியாகின்றது" எனகிறார்கள்.

துர்க்காபூசா விதிபடலத்தில், இந்தச் சுலோகத்துக்கு அடுத்த சுலோகம்,

> "அச்வயுக் சுக்ல பக்ஷவா அஷ்டமீ மூலசம்யுதா
> ஸாமஹா நவமீ நாமநாதனை லோகயேதி துர்லபா

அல்லது ஐப்பசிமீ சுக்லபட்ச அட்டமியும மூலமும் கூடிய நவமி மகா நவமியென்று பெயாபெறும இது மூவுலகத்தும கிடைத்தற்கரியது" என்று கூறுகின்றது. இதற்கடுத்த வாக்கியம் இச்சுலோகத்தை நிச்சயப்படுத்துகின்றது. அவ்வாக்கியம்:-

> 'அஷ்டம்யாஞ்ச நவம்யாஞ்ச ஜநன்மா தாமம்பிகாம்
> பூஜயித வாச்சுவயுக் மாஸிவிசோகோ ஜயதிதுவிஷ.
> சநதர் ஜயதி ஹஸ்தம் காரைகட்கோத்காதகயான் வரான்'

அரசன் ஐப்பசி மாதத்தில் அட்டமியிலும் நவமியிலும் தேவியைப்பூசித்து, சோகமின்றிப் பகைவரை வெல்லுகிறான். வாளையுயாத்திக்கொண்டு வெட்டவரும் பகைவரை உம்காயத்தினாலே உறுக்கி ஜயிக்கிறான்" என்பதே.

இந்த சுலோகங்களை ஆராய்ந்து பார்த்தால் மகாநவமிக்கேற்ற காலம்யாது என்பது புலப்படும். சாந்திரயான ஐப்பசி (ஆச்வயுக்)மீ பெரும்பான்மை கன்யாமாதத்தில வருமாதலால பொதுவாகக் கன்யாமாசம் சொல்லப்பட்டது என்பதும அதிகமாதத்தினாலே கன்னி மாதத்தில் ஆச்வயுஜம் வாரவிட்டால்,

ஆசுவயுஜத்தைப் பிரதானமாகக் கொள்ளவேண்டும் என்ப தும் ஆச்வயுஜ சுக்கிலபக்ஷ அட்டமியில் மூலநக்ஷத்திரம் வரா தவிடத்து ஆச்வயுஜ சுக்ல அட்டமி நவமிகளில் பூசிக்கவேண் டும் என்பதும் புலப்படுகின்றன. முற் சுலோகங்களைப் பிர மாணமாகக் கொண்டு தம் கொள்கைக்கு மாறானது என்று நினைத்துப்போலும் 'அஷ்டம்யாஞ்ச' என்னும் சுலோகத்தைப் பிரமாணமாகக் கூறாது விடுத்தனர்.

மேலும், சை. சி. சங்கத்தார் "காமிகாகமம்" நவராத் திரி கூறுமிடத்தில் "சௌரமானேன கர்த்தவ்யா நவராத்தி ரிர் விசேஷத: சாந்திரமானே நகர்த்தவ்யா கிருதஞ்சேத் ராஷ்ட்ர நாசனம் என்று கூறுகிறது. இதனால் நவராத்தி ரியைச் சௌரமானத்திலே தான செய்தல்வேண்டும். சாந் திரமானத்தில் செய்யக்கூடாது செய்தால் நாடு அழியும் என்ற பொருள் வெளிப்படை" என்று எழுதியிருக்கிறார்கள்.

இந்த வசனத்தைக் காமிகாகமத்தில் எப்படலத்திலி ருந்து எடுத்தார்களோ! இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதிற் பிரயோசனம் இல்லை. ஆயினும் இச்சுலோகம் முற்கூறிய காமிகாகம காரணாகம வசனங்களுக்கு முரணாகுமோ எனின் முரணாகாது. எதனால் எனின; சிந்தாந்த சாராவளி வியாக்கி யானததில்,

"அதஏவ உத்தராயணே மாகாதி ஷாண்மாசா
ஸ்சௌராச் சாந்திரா இதிதுவி பிரகார:
ததா தக்ஷிணாயனே சிராவண்யாதி ஷாண் மாஷ:
மாக மாசோ யதா மகரஸ்தி தார்கேணயுக்த:
ததா ஸௌரமாசத் தூவேந முக்கியம்
யதா மாகமாசோ கும்பரவிணாயுக்த:
ததா சாநதிர மாஸதவேந முகய:
ஏவம் சர்வேஷாம் மாஸாநாம்:
சௌர சாந்த்ரத்துவம் யோஜ்யம்"

உத்தராயணத்திலே மாசி முதலிய ஆறுமாசங்களும் சௌர மானம் என்றும் சாந்திரமானம் என்றும் பெயர்பெறும். தக்ஷிணாயனத்திலே ஆவணி முதலிய ஆறுமாசங்களும் அவ் விருவகைப் பெயர்களைப் பெறும். (சாந்திர)மாகமாதம் எப் பொழுது மகரசூரியனோடு கூடிவருகிறதோ அப்பொழுது

சௌரமாசத்தாற் சிறந்தது. மாகமாசம் எப்பொழுது கும்ப ரவியுடன் கூடியதோ அப்பொழுது சாந்திரமானத்தாற் சிறந்தது. இவ்வாறே மற்றைய மாதங்களுக்கும் சௌரமான சாந்திரமானங்கள் கொள்ளத்தக்கன.

“மாகாதி மாசாநாம்: மகராதி ஸம்ஞ்ஞாச தத்ரைவோக்தா”

இன்னும் மாசி முதலிய (சாந்திர) மாசங்களுக்கு மகரம் முதலிய பெயர்களும் வரும்.

என்று இந்த சாந்திரமாச சௌரமாச நிர்ணயங்கள் நிர்வாச காரிகை முதலிய பல நூற் பிரமாணங்கொண்டு விளக்கப்பட்டிருக்கின்றமையினால் எங்கள் சோமசம்பு பத்ததி வியாக்கியானத்திலும் இப்படியே சொல்லப்பட்டது.

அங்ஙனமாயின் ஆச்வீச சுக்கப் பிரதமை கன்னி மாதத்தில் வருதலால் அது சௌரமாதத்திற் சிறந்தது. மற்றைய திதிகள் துலாமாதத்தில் வருதலால் சாந்திர மாதத்திற் சிறந்ததே என்று கூறுபவர்கள் சித்தாந்த ஸாராவளி வியாக்கியானத்தில் “மாகாதி மாசாநாம் மகராதி ஸம்ஞ்ஞாச தத்ரைவோக்தா” (மாசி முதலிய சாந்திரமாசங்களுக்கு மகரம் முதலிய பெயர்களும் வரும்) என்று கூறுவதனால் அறிந்து கொள்வார்களாக. மேற்கூறிய பிரமாணங்கொண்டு ஐப்பசிக்குக் கன்னிமீ எனனும் பெயர் சிறப்புவிதியாற் பெறப்பட்டதாகையால் சௌரமாசக் கொள்கையும் உடையன என்று அறிவார்களாக.

காமிகாகமத்தில் “கந்யா சிசுப்ரத மாமாரப்ய” என்று விதித்தலினாலும், பூர்வகாரணத்தில், ‘ப்ரதிபத்தின மாரப்ய’ என்றிருத்தலாலும், யாமளா தந்திரத்தில் ‘ப்ரதமாயாம் சமாரப்ய’ என்றிருத்தலாலும், நவராத்திரிக்கு ஆரம்பம் பிரதானமானது. கன்னியில் அமாவாஸ்யை கழிந்த பிரதமையும் ஆச்வீஜசுத்தப் பிரதமையும் ஒன்றே. இதுவே நவராத்திரி விரதாரம்பத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. பிரதமை தொடக்கம் தசமிவரையும் கன்யா மாசத்தில் வருதலும் சிறுபான்மை துலாமாசமுற் கூற்றில ஸமாப்தியாவதும ஆகமங்களுக்குச் சம்மதமாம்.

காரணாகமத்திலுள்ளதென்று அவர்கள் காட்டிய ‘மாஸே பாத்ரபதே...பாஷிதம்’ எனனும் சுலோகம் அச்சுப்புத்தகத்தில் இல்லை.

இதுவரைகாட்டிய காமிகம் காரணம் முதலிய பிரமாணங்களால், ஆச்வயுஜசுக்தப் பிரதமையிற் றொடங்கி நவமியீறாகச் செய்யவேண்டுமென்பது பெறப்பட்டது. புராணங்களும் இவ்விதமே கூறுகின்றன.

## ஸ்காந்த புராணம்

"நவம்யாந்துவ் ரதம் புண்யம் மாஸிசாச்வயுஜேஸிதெ"

(சாந்திர) ஐப்பசிமீ சுக்கிலபக்ஷ நவமியில் அநுஷ்டிக்கத்தக்க புண்ணியமான விரதம்.

விநாயகசதுர்த்திக்கு சை. சி. சங்கத்தார் சுவாயம்புவாகமத்தில் இருப்பதாக மூன்று சுலோகங்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அச்சுலோகங்களின் கருத்து "விநாயகோற்சவத்தைச் சிறப்பாகக் கூறுகின்றேன். தீர்த்த தினத்தை முதலில் நிச்சயித்துக்கொண்டு அதற்குமுன் மூன்றாவது தினத்திலாவது, ஐந்தாவது தினத்திலாவது, ஏழாவது தினத்திலாவது, ஒன்பதாவது தினத்திலாவது கொடியேற்றவேண்டும். ஆவணிமீ சதுர்த்தியில் மகோற்சவம் செய்யவேண்டும். அத்தினத்தில் தீர்த்தோற்சவமும் செய்யலாம். அல்லது பஞ்சமியிலாவது செய்யலாம்" என்பது.

காரணம் (பக்கம் 580) குமாரதந்திரம் முதலிய நூல்களில் ஒருநாள் மூன்றுநாள் ஐந்துநாள் உத்ஸவங்களுக்கு துவஜாரோகணத்தை நீக்குதல்வேண்டும் என்று காணப்படுகின்றது. அவர்கள் காட்டிய சுலோகங்களில், மூன்றுநாள் ஐந்துநாள் உத்ஸவங்களுக்கும் துவஜாரோகணம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நாளுற்சவம் சொல்லப்படவில்லை. ஒருநாளுற்சவம் சதுர்த்தியிற் செய்வது குற்றமென்று வேறுமொரு சிருட்டி செய்வார்கள் போலும். பஞ்சமியை உற்சவாந்தமாகக் கொள்ளின், சதுர்த்தி உத்ஸவம் இல்லாமற் போகின்றது. சதுர்த்தியை அந்தமாகக்கொள்ளின் பஞ்சமியிலாவது என்ற பதம் பிரயோசனமற்றதாகின்றது. இக்காரணங்களால் மேற்படி சுலோகங்கள் அவசியநிமித்தம் எழுந்தனபோலும். அன்றியும், இவ்வசனங்கள் சதுர்த்தி விரதத்தைப்பற்றிக் கூறியனவல்ல. விநாயகருக்கு மஹோற்சவம் செய்யும் காலத்தைப்பற்றிக் கூ

றுகின்றன. விநாயக சதுர்த்தியைப்பற்றிக் காமிகம் முதலிய ஆகமங்களிற் கூறப்படவில்லை. புராணங்களிற் சொல்லப்பட்டது. ஸ்காந்தம் உபதேசகாண்டத்தில்,

"விக்கினேசுவரஸ் யாபிவ்ரதம் சுக்ரவாரே சுபாவஹம்
சதுர்த்தியாந்து வ்ரதம்புண்யம்ப் ரோஷ்டபங்மாஸிகேஸிதே"

விநாயகக்கடவுளுடைய விரதம் வெள்ளிக்கிழமையிற் பரிசுத்தமானது. சாந்திர (பாத்திரபதம) புரட்டாதியில் சுக்கிலபக்ஷ சதுர்த்தியில் அநுஷ்டிக்கப்படுவது புண்ணியமானது என்று கூறப்பட்டுள்ளது. பவிஷ்யத் புராணத்திலே,

"மாசி பாத்ரபதேசுக்லே சதுர்த்யாம் கணநாயகம்

பாதத்திரபதிமீ சுக்கிலபக்ஷ சதுர்த்தியில் விநாயகரைப் பூஜிக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விநாயகபுராணம் "பந்தமறு மாவணித் திங்களின் வளரும் சதுர்த்தி" எனக் கூறுகின்றதேயெனில்; சௌர ஆவணி மீ பூர்வபக்ஷசதுர்த்தியும், சாந்திர பாதத்திரபத சதுர்த்தியும் ஒன்றென்பதே கருத்து. இவ்விரதங்களைச் சாந்திரமானப்படி கொள்வது சிவாகமங்களுக்கு விரோதமன்று.

விநாயகபுராணத்தில்வருவதற்கு சாந்திரங்கலந்ததுவெனினும் என்று பொருள்கொள்ளவேண்டும். இங்ஙனம் பொருள்கொள்ளவே மூலபுராணங்களுக்குச் சம்மதமானது. புராணிகர் தமக்குங் கருத்து இதுவேயாம் என்று உணர்த்துவதற்காகவே 'திங்கள்' என்று கூறினர்.

உத்தரகாரணம் சிவராத்திரி பூசாவிதிப் படலத்தில்,

''மாகபால்குனயோ: க்ருஷ்ணசதுர்த்தஸ்யாம் சுபேதினே
சௌர மாஸேவ்ரதம் குர்யாத் சாந்த்ரமானே நகாரயேத''

(சௌரசாந்திர மாதங்களாகிய) மாசி பங்குனிகளில் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி விரதத்தை மாகசௌரமாதத்தில அநுட்டிக்கத்தக்கது. பால்குன சாந்திரம தகாதது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இச்சுலோகம எல்லா விரதங்களையும் சௌரமானத்திலேயே செய்யவேண்டும என்று சொல்லவில்லை. சிவராத்திரியை நிர்ணயிக்க இவ்வாக்கியத்தின முற்பாதியை மறைத்துவிட்டு, பிற்பாதியை எடுத்து எழுதி 'சௌரமானத்தில விரதம் செய்யத்தக்கது சாந்திரமானம தகாதது' என்று பொருளும் யாதோர் இயைபுமின்றி எழுதி, பிள்ளையார் சதுர்த்திக்குப் பிரமாணமாகக் காட்டிவிட்டார்கள். சைவாபிமானிகள் இவர்களது போக்கை புலனாக்கி கொள்வார்களாக. அங்ஙனமாயின பூர்வகாரணம் மஹோத்ஸவ விதிபடலத்தில்,

''சௌரமாஸம் ப்ரஸஸ்தம் ஹிசாந்த்ரமாஸோப்யல்பகம்''

சௌரமாஸமே மேலானது, சாந்திரமாசம் அற்பமானது. என்றுவரும சுலோகத்தைப் பிரமாணமாகக் காட்டியுள்ளார்களெனின, இச்சுலோகம மஹோற்சவங்களின பேதங்களைப்பற்றிக் கூறியதேயன்றி, சதுர்த்தியையாவது நவராத்திரியையாவது கூறவில்லை. உத்தரகாரணம மஹோற்சவ விதிப்படலம் சஉ-வது சுலோகமுதல படித்துப்பார்த்தால நன்றாய்விளங்கும. ஆதலால், இச்சுலோகத்தை நவராத்திரிக்கும சதுர்த்திக்கும் பிரமாணமாகக் கொண்டது சிறிதும பொருந்தாது. மேலும அவர்கள் நவராத்திரிக்குப் பிரமாணமாக எடுத்துள்ள,

''சௌரமானே நகர்த்தவ்யா நவராத்திர்விசேஷத:
சாந்த்ரமானே நகர்த்தவ்யாகிருதஞ்சேது ராஷ்ட்ரநாசனம்''

என்னும் சுலோகமொன்றைச் சதுர்த்திக்குப் பிரமாணமாக எழுதியிருக்கிறார்கள். இத்தியாதி காரணங்களால் ஆவணிமீ பாத்திரபதம் வரவிட்டால் பாத்திரபதத்திலே சதுர்த்தியு ற்சவம் செய்வது சாத்திர சம்மதமாகும் எனபது பெறப்பட்டது.

சை. சி. சங்கத்தின் சார்பாகக் கொத்த மங்கலம் வே. நாராயண கனபாடிகள் என்பார் ஒருவர் 7-8-36 இல் வெளியிட்ட 'சௌரமானமும் சாந்திரமானமும்' என்னும் பிரசுரமொன்றில் சில சுலோகங்கள் காணப்படுகின்றன. அச்சுலோகங்கள,

"விருதாநி சோற்சவான் சர்வான்சௌரேணை வஹுகாரயேத்
யதிசாந்த்ரேணகுர்வீதம் மகத்பாபம் ஸமச்நுதே
விருதாநி தேவகர்மாணி திராவிடே சௌரமாசமேத்
கர்ணடகாதி தேசேஷு ததாசாந்திரமா சேனவா"

என்பன. அவை ஏட்டுப்பிரதி சகலாகமசாரசங்கிரகம் சிவ ராத்திரி நிர்ணயப் பிரகரண"த்தில் உள்ளனவாம். நீர்வேலி ஸ்ரீமத். சங்கரபண்டிதர் பரிசோதித்தெழுதிய சகலாகம சார சங்கிரகம் ஏட்டுப்பிரதியும் எம்மிடமிருக்கிறது. அதிலும் ஆராய்ந்தோம். சுலோகங்கள் காணப்படவில்லை. சகலாகம ஸாரசங்கிரகம் அச்சுப்புத்தகத்திலும் ஏட்டுப் பிரதியிலும் போசனவிதியுடன நூல் சமாப்தியாகிறது. சிவராத்திரி நிர்ணயப் பிரகரணமென்று ஒரு படலம் அந்நூலில இல்லை. அவர்கள் புதிதாகச் சிருட்டிக்கும் சுலோகங்களை ஏட்டுப்பிரதியில் இருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். பழைய ஏட்டுப் பிரதிகளை எடுத்துப் பார்த்தால் அவைகளில அகப்படுவதேயில்லை. அவர்கள் சொல்லுவது உண்மைதானு? சைவசமயாபிமானிகளே, அவர்கள்சூட்சியை அறிந்து கொள்ளுங்கள்.

சை. சி. சங்கத்தார் "முருகப்பெருமான் சூரபன்மனை அழித்ததினம் ஐப்பசியாதத்திய வளர்பிறைச் சட்டியாம். இதனையே கந்தபுராணம் கந்தவிரதப்படலத்தில்(செய்யுள்20)

வெற்பொடு மவுணன் தன்னை வீட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப்போற்றி அமரரும் முனிவர் யாரும்

சொற்படு துலையின் திங்கள் சுக்கில பக்கந் தன்னில்
முற்பகல ஆதியாக மூவிருவைகல் நோற்றார்

என்று கூறுகின்றது'' என்று வரைந்துள்ளார்கள்.

இந்தச் செய்யுளில் தேவர்களும் முனிவர்களும் சுப்பிரமணியக் கடவுளைத் துதித்து ஐப்பசி மாதத்திலே பூருவபக்கப் பிரதமைமுதல சட்டியந்தமான ஆறுநாட்களில சட்டி விரதத்தையனுட்டித்தார்கள் என்று சொல்லப்பட்டதேயன்றி, சுப்பிரமணியக் கடவுள் சூரனைச் சம்மாரஞ் செய்ததினம் ஐப்பசிமீ பூருவபக்கச் சட்டியிலென்றாவது, புரட்டாதிப் பிரதமையில் ஆரமபித்து, ஐப்பசிமீ சட்டியை அந்தமாகக் கொளளவேண்டுமென்றாவது சொல்லப்படவில்லை. இதைக்கவனியாது தாம் நியமித்ததைை வலியுறுத்துதற்காக, கௌசிகப் பிரஸ்நகுமாரதந்திரததில் இருந்தெடுத்ததாகச் சில சுலோகங்களை யுண்டாக்கிப் பிரசாரம் செய்தனர் அவைகளைக் கண்டவுடன் அநேக ஏடுகளை ஆராய்ந்துபார்த்தோம். அச்சுப்புத்தகத்தையும் ஆராய்ந்து பார்த்தோம். அச்சுலோகங்கள் காணப்படவில்லை. கந்தசட்டி விரதம் [illegible] சுத்தப பிரதமையிற் றொடங்கி, சட்டியில் முடிப்பதே சுருதி யுக்தி அநுபவங்களுக்கு மாறாகாதது. ஆனால், ஆறுநாளுற்சவம் திதி க்ஷயவிருத்திக்கேறப, சில வருடங்களில் ஐந்துநாளாகவும் ஏழுநாளாகவும் முடிகிறது. ஆகையால் கந்தபுராணத்திற் கூறிய துலாமாத பூர்வபக்கப் பிரதமையும், கிருத்திகாசுத்தப் பிரதமையும் ஒன்றாய் இருத்தலின், கார்த்திகைமீ ஐந்தாந்திகதி கந்தசட்டி விரதத்தைக் கொள்வதுவே சாஸ்திர சம்மதமாம.

மானாமதுரை

## பிரம்மஸ்ரீ. தெய்வசிகாமணிப்பட்டர் அவர்கள்

கடிதமொன்றில்

பின்வருமாறு பிரமாணசகிதம் எழுதுகின்றார்:

இவ்விடத்திலுள்ள பஞ்சாங்கங்களில் விநாயகசதுர்த்தி நவராத்திரி ஸ்கந்தஷஷ்டி உத்ஸவாதிகள் மலமாஸ தோஷத்தால் பின்னால்தான் செய்யவேணு"மென்று வரைந்திருக்கிறது. தேவாலயங்களுக்கெல்லாம் சௌரமானம் தான் பிரசஸ்தம். மாசநக்ஷத்திரத்தையே தீர்த்தமாகவைத்து நடக்கிற உத்ஸவாதிகளுக்கு இந்த சௌனமேதவிர, மற்றை உத்ஸவங்களுக்கில்லை. தீர்த்த நக்ஷத்திரத்தைப் பிரதானமாக வைத்து நடக்கிற உத்ஸவத்துக்கு முதல்மாதத்தில் ஆரம்பம் வந்துவிடும் (சித்திரைமீ உத்ஸவத்துக்கு பங்குனிமீ ஆரம்பம் வந்துவிடும். அது சாஸ்திர விரோதமென்று சொல்லமுடியாது. நக்ஷத்திரம் விருத்திக்ஷயத்துக்குத் தகுந்தபடி அவ்விதம் தான் வரும். அதேமாதிரி விநாயகசதுர்த்தி, நவராத்திரி, ஸ்கந்தஷஷ்டி முதலான உத்ஸவங்கள் திதியைப் பிரதானமாகவுள்ள உத்ஸவங்கள். மற்ற சில உத்ஸவங்களுக்குச் சமமாக இதைச் சொல்லமுடியாது. சிவோத்ஸவங்களுக்கெல்லாம் தீர்த்தத்தை நிச்சயம் செய்துகொண்டு, ஆரம்பத்தைச் செய்யவேண்டும். இந்த உத்ஸவங்களுக்கு ஆரம்பம் முக்கியமென்று வாக்கியங்கள் மூலம் வெளியாகிறது. அதினால் ஒன்பதுநாள் உத்ஸவம் சில வருஷங்களில் திதி விருத்திக்ஷயத்துக்குத் தகுந்தபடி எட்டு நாளாகவும் ஆகின்றது. மேற்படி காரணங்களினால் நவராத்திரி இவ்விடங்களெல்லாம் பின்னால்தான் நடக்கப்போகிறது.

அன்பர்களே!

இதுகாறும் நாம் எழுதியவற்றால் சூரியனைப்போலவே சந்திரனும் மகத்துவம் மிக்கவன் என்பதும், சௌரமாசம் போலவே சாந்திரமாசமும் சைவர்களாற் கொள்ளத்தக்கது என்பதும் மலமாசத்தை சில கருமங்களில் நீக்குதல் துணிபாம் என்பதும், சைவப் பஞ்சாங்கத்தில் இவ்வருடம் நவராத்திரி, சதுர்த்தி, கந்தசட்டி விரதங்களை நிர்ணயம் செய்தது சைவ சாத்திரங்கட்கும், ஆன்றோர் கொள்கைக்கும் முரணானதென்பதும், மற்றைய பஞ்சாங்ககாரர்கள் நிர்ணயித்ததே சாத்திர சம்மதமானதென்பதும பிறவும் பசுமரத்தாணிபோற் பதித்து நாட்டப்பட்டன.

நம் சைவசமயிகள் சைவாகம முறைப்படி விரதாதிகளை யனுட்டித்து, சைவ உலகிற் பரவியோங்கி, சைவசமய பரிபாலனஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர், ஸ்ரீலஸ்ரீ சங்கரபண்டிதர் முதலிய பெரியோர்கள் வகுத்த வழியிலே ஒழுகிவருமாறு அனுக்கிரகிக்கும்படி சிவபெருமானைக் காயத்தாலும், வாக்காலும், மனத்தாலும் வணங்கி வாழ்த்தித் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்

ச. குமாரஸ்வாமிக் குருக்கள்

மாவிட்டபுரம்.

தாது௵ புரட்டாசி௴

ச. குமாரசுவாமிக் குருக்கள்

அச்சுவேலி.